www.padippakam.com




# தொழிலாளர் பாதை

★ வார இதழ் ★ இதழ் 375 ★ 1987 நவம்பர் 6 வெள்ளிக்கிழமை ★ விலை 1–50 சதம்


## அனைத்துலக பங்கு சந்தை வீழ்ச்சி:

# உலக முதலாளித்துவம் பொறிந்து செல்கின்றது

**1987** அக்டோபர் 19 ல் அமெரிக்காவின் நியூயோர்க் வோல் ஸ்ரீட் பங்குச் சந்தையில் ஏற்பட்ட பிரமாண்டமான வீழ்ச்சி, உலக முதலாளித்துவத்தை அடியோடு வீழ்ச்சி காண செய்வதோடு உலகம் பூராவும் முதலாளித்துவத்தின் அழிவுகளுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர போராட்டங்களின் வெடிப்புக்களையும் ஏற்படுத்தவுள்ளது பங்குமுதல் சந்தையின் வீழ்ச்சியின் பின்னணியில் தொடர்ந்து வரும் பொருளாதார வீழ்ச்சி, பாசிசம், யுத்தம் என்பவற்றை எதிர்த்து போரிடுவதற்கான ஒரே வழி, முதலாளித்துவத்தை தூக்கி வீசி சோசலிசத்தை நிர்மாணிக்கப் போராடுவதே ஆகும்.

அமெரிக்க ஜனாதிபதி றொனல்ட் றீகன் உட்பட ஏகாதிபத்திய ஆட்சியாளர்களும், அவர்களின் சார்பில் கைக் கூலிக்கு வேலை செய்யும் பொருளியலாளர்களும், பத்திரிகையாளர்களும் அக்டோபர் 19 ல் இடம் பெற்ற வீழ்ச்சி, 1929 வோல் ஸ்ரீட் வீழ்ச்சி அளவு பலத்தது அல்ல எனக் கூறி வருகின்றார்கள். இதன் மூலம் கண்களில் மண்ணை அள்ளி வீசி, அவர்கள் முகம் கொடுக்கும் மோசமான நெருக்கடியின் அழிவுகளுக்கு தொழிலாள வர்க்கத்தைப் லிகடாவாக்க தயாராகுகின்றனர்.

நியூயோக் வோல் ஸ்ரீட் பங்குச் சந்தையில் பங்கு விலைகள் அக்டோபர் 19 ல் நூற்றுக்கு 23 வீதத்தால் அல்லது 508 புள்ளிகளால் வீழ்ச்சி கண்டன. இந்த வீழ்ச்சியினால் அன்று பங்குகளின் பெறுமானம் 500 பில்லியன் டாலர்களால் இறங்கியது. இந்த வீழ்ச்சி 1929 அக்டோபர் 29 ல் 'வோல் ஸ்ரீட்' 13 வீத வீழ்ச்சியையும் தாண்டியுள்ளது.

வோல் ஸ்ரீட்டில் ஏற்பட்ட இந்த நடுக்கம் அக்டோபர் 20 ல் டோக்கியோவுக்கும் பரந்தது. இதனால் அங்கு பங்குகளின் பெறுமானம் 15 வீதத்தால் இறங்கியது சிட்னியில் இந்த இறக்கம் 55 பில்லியன் டாலர்களால் மதிப்பிறக்கத்தை உண்டு பண்ணியது. இது 25 வீத வீழ்ச்சி ஆகும். இந்நெருக்கடியினால் கிலியடைந்த ஹொங் கொங் நகர வர்த்தகர்கள் பங்குச் சந்தையை ஒரு கிழமைக்கு கதவு அடைப்புச் செய்தனர்.

உண்மை நிலையை மூடி மறைக்கும் பொருட்டு அமெரிக்க ஜனாதிபதி றீகன் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''சகல வர்த்தகச் சுட்டெண்களும் உயர்ந்து உள்ளன... பொருளாதாரத்தில் எதுவித தவறும் இல்லை இந்நாட்டின் பொருளாதார அத்திவாரம் அனைத்தும் நன்றாகவே உள்ளன.''

றீகனின் இந்தப் பேச்சு, 1929 வீழ்ச்சியின் போது அமெரிக்க ஜனாதிபதியாக விளங்கிய ஹூவரின் பேச்சினையே ஒத்துள்ளது: ''நாட்டின் முக்கிய வர்த்தக நடவடிக்கைகள், அதாவது உற்பத்தி, விநியோகம் நல்ல, உறுதியான அடிப்படையில் உள்ளன.''

இந்த மோசடி நிறைந்த அறிக்கையை சிதறடித்த வண்ணம் 1931 ல் வோல் ஸ்ரீட் பங்கு முதல் சுட்டெண் 41 வரை வீழ்ச்சி கண்டதோடு அதனுடன் கைகோர்த்த வண்ணம் ஏகாதிபத்திய உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியும், அதன் பெறுபேறாக இலட்சோப லட்சம் தொழிலாளர்களின் வேலை நீக்கமும் கஞ்சி கியூக்களின் வளர்ச்சியும் தொழிலாள வர்க்கத்துக்கு இன்றும் நினைவிலுள்ளது.

நெருக்கடியின் அழிவுகளை எதிர்த்து தொழிலாளர்கள் மூர்க்கமாகப் போரிட்டனர். எனினும் ஸ்டாலினிச, சமூக ஜனநாயக துரோகத் தலைவர்களின் காட்டிக் கொடுப்பினால் இவர்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து மிலேச்ச பாசிச அரசாங்கம் ஜேர்மனியில் ஆட்சியைக் கைப்பற்றியது. நெருக்கடியினால் கிலிகண்ட ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் இறுதியில் உலகை மீண்டும் தம்மிடையே மறு பங்கீடு செய்யும் இரண்டாம் உலக யுத்தத்தில் இறங்கியதோடு கோடானு கோடி தொழிலாளர்களையும், ஏழைகளையும் பலி கொண்டனர்.

இன்றைய வோல் ஸ்ரீட் வீழ்ச்சியை கணக்கெடுக்கத் தேவை இல்லை எனக் கூறும் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களும், அதன் தாக்கங்களை எதிர்கொள்ள தொழிலாள வர்க்கத்தினை தயார் செய்யாத ஸ்டாலினிச, சமூக ஜனநாயக தலைவர்களும் 1930 பதுகளில் ஆரம்பமான பரந்த அளவிலான அழிவுகளுக்கு தொழிலாளர்களையும், ஏழைகளையும் மூழ்கடிக்கத் தொழிற்பட்டு வருகின்றனர்.

வோல் ஸ்ரீட்டின் இந்த நடுக்கம் சிறப்பாக நெருக்கடியில் தலை மூழ்கிப் போயுள்ள அமெரிக்க முதலாளித்துவ பொருளாதாரம் பற்றிய நம்பிக்கையை சிதறடித்துள்ளது.

பொறிவும், 1987 ம் ஆண்டின் 170 பில்லியன் டொ

(2 ம் பக்கம் பார்க்கவும்)

## காந்தியின் பிற்போக்கு நடவடிக்கைக்கு றீகன் பாராட்டு

**வ**டக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ் இனம் இந்திய ஆக்கிரமிப்பு படையினரால் கொடூரமாக கொலை செய்யப்பட்டதையிட்டு பிற்போக்கு மகிழ்ச்சியை வெளியிட்டு உள்ளவர்கள் யூ என் பி. அரசாங்கமும் சிறீலங்கா சுதந்திர கட்சியினருமான முதலாளிகள் மட்டுமல்ல. சமசமாஜ கம்யூனிச இ. தொ கா தலைமைகளும் அவர்களுடன் இவ்விடயத்தில் தோளோடு தோள் சேர்ந்துள்ளனர்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஸ்டாலினிச தலைமைக் கும்பல் இவ்விடயத்தில் முன்னணியில் நிற்கின்றது. இந்திய முதலாளிகளது வளர்ப்பு நாய்க் கும்பல்களாக யூ. என். பி. முதலாளிகள் செல்லுகையில் ஸ்டாலினிஸ்டுகளோ இந்திய முதலாளிகளின் காலடியை நக்கும் நாய்க் கும்பல்களாக செல்கின்றனர்.

அவர்களது 'அத்த' (உண்மை) என்ற பெயரில் வெளியாகும் பொய்ப் பத்திரிகையும் கூட்டங்களும் இந்திய படையினரது இரத்தக் களரி மிக்க ஆக்கிரமிப்பை நியாயபூர்வம் ஆக்கி விட சாதாரண குடிமக்கள் கொயுண்டது என்பது தவறு என்று கூறியும், ராஜீவ் காந்தியை முற்போக்காளராக பூச்சுப் பூசி ஜயவர்தன ஆட்சியை பூசி மெழுகவும் தமிழ் ஈழ விடுதலைப் புலி இயக்கத்திற்கு சேறடித்தும் வருகின்றன

ஆக்கிரமிப்பின் போது சாதாரண குடிமக்கள் கொலையுண்டமை தவிர்க்க முடியாதது என கூறி ஸ்டாலினிச அத்த பத்திரிகை தலையங்கம் தீட்டியுள்ளது.

(8 ம் பக்கம் பார்க்கவும்)

## வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!

படிப்பகம்

www.padippakam.com



# பங்கு அனைத்துலக சந்தை வீழ்ச்சி. . .

[முன் பக்கத் தொடர்ச்சி]

லர்கள் கொண்டதாக விளங்கும் அமெரிக்க வரவு செலவு திட்டத்தின் பாரிய பற்றுக் குறையும் டாலர் மதிப்பு வீழ்ச்சியுறுவதால் ஏற்படும் விளைவுகளும் அமெரிக்க பொருளாதாரத்தின் ஸ்திரப்பாடு பற்றிய நம்பிக்கையை ஆட்டம் காணச் செய்கின்றது.

எனினும் அக்டோபர் 19 ம் திகதி நிகழ்ந்த வரலாற்றில் இடம் பெறவல்ல பொறிவு ஓர் தற்செயலான நிகழ்வு அல்ல. முதலாளித்துவ அமைப்பினுள் கருக் கொண்டுள்ள வரலாற்று முரண்பாட்டினால் உருவாக்கப்பட்ட பொறிவு ஒன்றே இது. முதலாளித்துவத்தை தூக்கி வீசுவதற்கான நிபந்தனைகளை சிருஷ்டிக்கும் நடைமுறை விதிபற்றி கால் மார்க்ஸ் சமர்ப்பித்த தீர்க்கதரிசனம் மீண்டும் நிதர்சனமாக நிலைநாட்டப்பட்டு வருகின்றது. அதாவது உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியானது, முதலாளித்துவ தனியார் உரிமை, ஒருவருக்கு ஒருவர் எதிராக போட்டியிடும் தேசிய அரசுகள் என்பற்றிக்கு இடையில் சிக்குண்டு இலாப விகிதம் பொறிந்து விழுதலாகிய நிலைமைக்கும், மதிப்பிறக்கம் பற்றிய சந்தேகத்திற்கு இடமளிப்பதான பரஸ்பர முரண்பாட்டிற்கு இடமளித்து முதலாளித்துவத்தினுள் செயற்பாடு விளங்கி முதலாளித்துவ அமைப்பு வரலாற்று ரீதியாக அழிவடைந்து பொறிந்தும், நெருக்கடிக்கும் கீழ்ப்படும் கட்டாய நிலைமை ஏற்படுவது உறுதிப்படுத்தபடுகின்றது.

முதலாளித்துவத்தின் இந்த மரணஓல கால கட்டத்தில் விசேடமாக இரண்டாம் உலக யுத்தத்தின் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட பரஸ்பர முரண்பாடுகள் இன்று வானளாவ உயர்ந்து வெடித்து விட ஆரம்பித்துள்ளன முதலாளித்துவம் சதாகாலமும் நிலவும் ஒன்றென்றும் அது 1929 ம் ஆண்டுகால வீழ்ச்சிக்கு இடமளிக்காத முறையை தேடி உள்ளது என்றும் கூறி கதையளந்த முதலாளித்துவ பொருளியல் நிபுணர்களுக்கும் ஸ்டாலினிச சீர்திருத்தவாத, திரிபுவாதிக்கும் கன்னத்தில் அறைவதாக தற்போதய நெருக்கடி பலத்த தாக்குதலை தொடுத்துள்ளது.

பாரிய பொருளாதார அழிவின் மத்தியில் உலகத்தை துண்டாடி பகிர்ந்து கொள்ளும் இரண்டாவது உலக யுத்தத்திற்கு விரைந்த ஏகாதிபத்திய கொள்ளைக்காரர்கள் இதன் பின் யுத்தத்தின் அழிவிற்கு எதிராக எழுந்த தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர போராட்டத்தில் இருந்தும் உலகம் எங்கும் ஸ்டாலினிச கம்யூனிச கட்சிகளினதும், சீர்திருத்தவாத கட்சிகளினதும் தலைமைகளால் நடத்தப்பட்ட காட்டிக் கொடுப்பின் பக்க பலத்திலேயே தப்பிப் பிழைத்து உள்ளனர். பிரான்சில் ஸ்டாலினிச தலைமைகள் டிகோலின் முதலாளித்துவ அரசாங்கத்துள் நுழைந்து தொழிலாள வர்க்கத்தைக் காட்டிக் கொடுத்ததுடன் இத்தாலிய ஸ்டாலினிஸ்டுகள் அந்நாட்டு முதலாளித்துவ அமைப்பினை பேண தொழிலாளர் போராட்டத்தை சிதறடித்தனர்.

பொறிந்து விழும் முதலாளித்துவத்தை பேணிடும் பொறுப்பினை ஏற்க ஏகாதிபத்திய ஆட்சியாளர் மத்தியில் அமெரிக்க ஆட்சியாளரிடமே சக்தி காணப்பட்டது. 1944 பிரெட்டன் வூட் ஒப்பந்தம் உட்பட்ட பல நடவடிக்கை தொடர்புகளினூடாக இதற்கான ஒட்டுப்போடல் சாத்தியமானது. நாணய அமைப்பினை தயாரித்தல். கடன் முறை, வர்த்தக ஒப்பந்தங்கள் என்பன இந்த ஒட்டுப்போடல்களுக்குள் இடம் பெற்றன.

இரண்டு தசாப்தங்களாக முதலாளித்துவ பொருளாதார செழிப்பினை உருவாக்கப் பயன்பட்ட அதே நடவடிக்கைகளே இன்றைய நெருக்கடியின் உக்கிரத்துக்கும் பங்களிப்பு செய்தன. யுத்தத்தால் சின்னாபின்னமாகிப் போன ஜப்பானிய, ஜேர்மன் பொருளாதாரங்களை கட்டி எழுப்ப அமெரிக்கா கோடானுகோடி டாலர்களை இந்நாடுகளுக்குள் பாய்ச்சியது. இப்பாய்ச்சல் அமெரிக்கா சிருஷ்டித்த கடன் குவியலில் இருந்தே இடம் பெற்றது. இதைத் தொடர்ந்து வியட்னாமிய விடுதலைக்கு எதிரான அமெரிக்க ஏகாதிபத்திய கொலைக்கார யுத்தம் இச்செலவினங்களை பன்மடங்கு அதிகரித்தது

## கடன் நிர்மாணம்

இந்தக் கடன் நிர்மாணமும், பெருக்கமும் 1940 ம் ஆண்டுகளின் தங்க நியமக் கொள்கையையும், 1944 ம் ஆண்டின் பிரெட்டன் வூட்ஸ் உடன்படிக்கையையும் சிதறடித்தன. இந்த உடன்படிக்கை 35 அமெரிக்க டாலர்கள் சமன் 1 அவுன்ஸ் தங்கம் என்பதை ஏற்றுக் கொண்டிருந்தது. இந்த அடிப்படை 1971 ஆகஸ்ட் 15 ல் அமெரிக்க ஜனாதிபதி நிக்சனால் நிர்மூலமாகக்கப்பட்டது.

இவற்றினால் அமெரிக்க ஏகாதிபத்தியம் கைத்தொழில் வல்லரசுகளின் முன்னோடி என்ற ஸ்தானத்தில் இருந்து கைத்தொழில் வனுந்தரம் என்ற நிலைக்கு வீழ்ச்சி கண்டது. 1980ல் முடிவுப் பொருட்கள் மூலம் 5 பில்லியன் டாலர்கள் சாதகமான சென்மதி நிலுவையைக் கொண்டிருந்த அமெரிக்கா 1986ல் 125 பில்லியன் டாலர்கள் பாதகமான சென்மதி நிலுவையை அடைந்தது. இப்பற்றுக்குறை 1987 ல் 180 பில்லியன் டாலர்களாக அதிகரிக்கும் எனக் கணக்கிடப்பட்டு உள்ளது. இந்த அடிப்படையில் 1987 ல் அமெரிக்காவின் வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறை 170 பில்லியன்களை எட்டும் எனவும், அதன் மூலம் அமெரிக்கா கடன் வழங்கும் நாடு என்ற நிலையில் இருந்து கடன் பெறும் நாடு ஆகும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறை பெருக்கமும், அதை அடைக்க டாலரை மதிப்பிறக்கம் செய்யும் றீகன் நிர்வாகத்தின் நடவடிக்கைகளும் அமெரிக்க பொருளாதாரத்தை செயற்கையாக வீங்கச் செய்யும். அத்தோடு பெரும் அளவிலான வெளிநாட்டுக் கடன்களை அமெரிக்காவிற்குள் ஈர்ப்பதற்கான கதவுகளையும் திறக்கும். அத்தோடு அமெரிக்காவின் கைத்தொழில் அத்திவாரமே சிதறுண்டு போகையில் நியூயோர்க் பங்குமுதல் சந்தையில் விற்பனையாகும் பங்குகளின் கடதாசிப் பெறுமானம் (1982 ஆகஸ்ட்) 1.1 றில்லியன் டாலர்களில் இருந்து 2 9 றில்லியன் டாலர்களாக அதிகரித்தது.

டாலரை மதிப்பிறக்கம் செய்யும் நடவடிக்கைகள் மூலம் அமெரிக்க பண்டங்களின் விலைகளைக் குறைக்கவும், ஜப்பானிய, மேற்கு ஜேர்மன் முதலாளிகளின் சந்தைகளை கபளீகரம் செய்யவும் அமெரிக்க முதலாளிகள் திட்டமிட்டு உள்ளனர். கருங்கச் சொன்னால் அமெரிக்க நெருக்கடியின் பளுவை ஜப்பான் மீதும் மேற்கு ஜேர்மன் மீதும் திணிப்பதே றீகன் ஆட்சியாளர்களின் திட்டம். இந்தச் சூதாட்டம் வர்த்தக பற்றுக்குறையை குறைப்பதற்குப் பதிலாக அமெரிக்காவுக்கும் அதன் போட்டியாளர்களுக்கும் இடையேயான பகைமையை உக்கிரமாக்கும்.

இந்த மதிப்பிறக்கச் சூதாட்டம், அமெரிக்காவில் இருந்து பெரும் அளவிலான வெளிநாட்டு முதலீடுகளை — முதலும் முக்கியமாக ஜப்பானிய மூதலீடுகளை வெளியேறத் தூண்டி உள்ளது. அத்தோடு புதிய முதலீடுகளும் வீழ்ச்சி கண்டுள்ளன.

1987 ல் (முதல் 6 மாதங்களில்) மாதாந்தம் 9.9 றில்லியன் டாலர்களை அமெரிக்காவில் முதலீடு செய்து வந்த ஜப்பானிய முதலீட்டாளர்கள் ஆகஸ்டில் அதனை 6.7 றில்லியன்களாக வெட்டிக் குறைத்து உள்ளனர். இந்த முதலீட்டு வெட்டு பங்குமுதல் சந்தையின் நெருக்கடிக்கு நேரடியாக பங்களிப்புச் செய்துள்ளது.

அக்டோபர் 19 ல் பங்குப் பெறுமானம் 508 புள்ளிகளால் வீழ்ச்சி கண்டமை, முதலீடுகளையும் தாண்டி பொருளாதார வீழ்ச்சி சூடு பிடிப்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. பெரும் வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறைகளுடன் பொருளாதாரத்தினை நடாத்திச் செல்ல எடுத்த முயற்சிகளுக்குப் பின்னர், இன்று அப்பற்றுக்குறையை தீர்க்க எடுக்கும் எந்த ஒரு நடவடிக்கையும் பொருளாதார வீழ்ச்சியை உக்கிரம் அடையச் செய்யும். பொருளாதார வீழ்ச்சி எனும் போது அது இலட்சோப லட்சம் தொழிலாளர்களின் வேலை நீக்கம் வறுமையையே குறிக்கின்றது. 1930 ம் ஆண்டின் பொருளாதார வீழ்ச்சியின் போது சீ. ஐ. ஓ. என்ற பிரமாண்டமான கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தினுள் அணி திரண்ட அமெரிக்கத் தொழிலாளர்கள் இன்று தீர்க்கமான அரசியல் பிரச்சினைக்கும் அரசியல் ரீதியில் அணி திரளும் அவசியத்துக்கும் முகம் கொடுக்கின்றனர்.

பங்குமுதல் சந்தையின் வீழ்ச்சி, அமெரிக்க ஏகாதிபத்தியம் பொருளாதார வீழ்ச்சியை கட்டவிழ்க்கவும், வர்க்கப் போரினை உக்கிரமாக்கவும், வர்த்தகப் போரினை உக்கிரமாக்கி மூன்றும் உலக யுத்தம் நோக்கி விரைவதற்குமான நிலைமைகளை சிருஷ்டித்துள்ளது

அக்டோபர் 26 ல் அமெரிக்க டாலரின் மதிப்பினை 138 யென்னுக குறைத்த றீகன் நிர்வாகம வட்டி வீததையும் குறைத்தது. இந் நடவடிக்கைகள் ஜேர்மன் பொருளாதாரத்துக்கு அமெரிக்க பண்டங்களை நுகரும்படி நெருக்குவதாக உள்ளது. இதன உச்ச கட்டமாக 'பொர்ட்' தலைவர் டொனல்ட் பீட்டாசன ''வெளிநாட்டு வர்த்தகத்தில் அமெரிக்கா லாபம். ஈட்ட வேண்டு[illegible] டின் டாலரை உடனடியா[illegible] 130 யென்னுக்கு மதிபிறக்கம் செய்து, 1990 ல் அதை 100 யென் மட்டத்துக்கு குறைக்க வேண்டும்'' என்று உள்ளார். இதற்குப் போட்டியாக ஜப்பான் வர்த்தக ஆராய்ச்சி நிறுவனமான 'நொரூமா ரிசேர்ச் இன்ஸ்ரிரியூட்' இயக்குனர் நொபுரு தகாமி பின்வருமாறு குறிப்பிட்டார்: ''வோல் ஸ்ரீட்டின் இந்தப் பொறிவு மிகவும் கவலையை உண்டுபண்ணியுள்ளது. சில காலம் ஜப்பான் முதலீட்டாளர்கள் ஜப்பானுக்கு வெளியே நிற்க அஞ்ச வேண்டியிருக்கும்.,, ('பினான்சியல் டைம்ஸ்' — 1987 அக்டோபர் 22)

இப்பேச்சுக்கள் பொருளாதார தேசியவாதத்தை தூண்டி விட்டு, இராணுவமயமாக்கலுக்கு இந்நாடுகளின் ஆட்சியாளர்கள் தயாராகி வருவதையும், உலகப் பொருளாதாரத்தை தம்முள் கூறு போடும் பெரும் போரில் ஈடுபடவும், தத்தம் நாடுகளின் தொழிலாள வர்க்க சக்தியை தகர்த்து எறியவும் ஆயத்தமாவதையும் சுட்டிக் காட்டுகின்றது.

இந்தப் பொருளாதாரப் பொறிவுகள் ''மூன்றும் உலக நாடுகளின் பிரச்சினைகளை மேலும் உக்கிரமாக்கி வெளிநாட்டு வர்த்தகத்தை நேரடியாக பாதிக்கும்'' என இந்திய நிதியமைச்சர் திவாரி குறிப்பிட்டு உள்ளார். முதலீடு, வெளிநாட்டுக் கடன்களின் பேரிலான செலவீனங்களை சமாளிக்க இந்தியா 1990 ல் தனது வெளிநாட்டு ஏற்றுமதி வருமானத்தை இரட்டிக்க வேண்டும் என இந்திய வர்த்தக, கைத்தொழில் சபை அறிக்கை (அக்டோபர் 14) குறிப்பிட்டுள்ளது.

## 'அமைதி' 'ஜனநாயகம்'

இந்நிலையில் தான் சமசமாஜ — கம்யூனிச — இ. தொ. கா தலைமைகள் யூ. என். பி அரசாங்கம் 'அமைதி' காக்கும் எனவும் ஜனநாயகம், நிறுவும் என கூறி வருகின்றனர். இந்த எதிர்ப்புரட்சி நப்பாசைகளுக்கு மத்தியிலேயே இலங்கை முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தமிழ் தேசிய இனத்தை அடக்கி ஒடுக்க வடக்கு — கிழக்கில் இந்திய ஆட்சியாளர்களின் உதவியுடன் ஆக்கிரமிப்புக்கு சமமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு உள்ளனர். இந்த மிலேச்ச நடவடிக்கைகளை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிப்பதை விட அவர்களுக்கு வேறு [illegible]

(8 ம் பக்கம் பார்க்கவும்)

படிப்பகம்

www.padippakam.com



# எம் - பண்டா: முதலாளித்துவ தேசியவாதத்தின் பரிந்துரையாளரின் முகமூடி கிழிக்கப்பட்டது

—கீர்த்தி பாலசூரிய

(இரண்டாம் பாகம்)

(அமெரிக்க ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் 1987 - 9 — 29 ம் திகதி புலட்டீன் பத்திரிகையிலிருந்து)

**பிரபாகரன் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை இந்திய முதலாளி வர்க்கத்துக்கு அடிபணியச் செய்ததன் மூலம் நாற்றமெடுத்த இந்திய — இலங்கை முதலாளிகளின் ஆட்சிகளுக்கு மற்றுமோர் முண்டு கொடுத்து வந்த வேளையில் பண்டா, பிரபாகரனின் பிரகடனத்தின் நான்கே நான்கு நாட்களுக்கு முன்பு பேசுகையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை முழுத் தீவினதும் தொழிலாளர், விவசாயிகளின் அதிகார பூர்வமான பிரதிநிதியாகப் புகழ்ந்தார்.**

''இடதுசாரிகளின் போராட்ட இலட்சியங்களுக்கும் தொழிலாள வர்க்கத்துக்கும், விவசாயிகளுக்கும் எவரேனும் பெருமை சேர்த்து தந்திருப்பின் அது தமிழ்ப் புலிகளே என நான் உங்களுக்கு கூறி வைக்கின்றேன். அவர்கள் பிரிட்டிஷாருக்கு எதிராக துப்பாக்கி ஏந்தியதோடு மட்டும் அன்றி(!) இலங்கையின் சகல கட்சிகளும், குழுக்களும் போல் அன்றி, அவர்கள் எந்த ஒரு கொள்கையின் பேரிலும் ஒரு போதும் சமரசம் செய்தார்களில்லை (கைதட்டல்)

''காலத்துக்குக் காலம் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு கொணரவும் போராட்டத்தை கை விடச் செய்யவும் அரசாங்கம் சாத்தியமான சகல வழிகளையும் கையாண்டு பார்த்தது. தமிழ்ப் புலிகளின் தலைவர்களைப் பொறுத்த மட்டில் சுய நிர்ணயம் பேரம் பேசலுக்கு உரியதாக இல்லாததால் எவ்வளவுக்கு அதிகம் முயன்றனரோ அவ்வளவுக்கு அதிகமாக தோல்வி கண்டனர்,''

தொழிலாளர் புரட்சிக் கட்சியினுள் 1986 அக்டோபரில் ஏற்பட்ட குமுறல்களின் போது பண்டா ''நான் ஒரு போராட்டத்துக்கு போகையில் நான் மரணச் சடங்குக்கே போகின்றேன்''! எனக் கூறிக் கொண்டார். ஆனால் துர் அதிஸ்டமான முறையில் அவர் தனது சொந்த மரணச் சடங்குகளுக்கே தயார் செய்கின்றார் என்பதை உணர வில்லை; தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அடி பணிந்து முதலாளித்துவ அரசிடம் ஆயுதங்களை ஒப்படைத்தது. அது மட்டும் அன்றி, இரண்டு முதலாளித்துவ அரசுகளதும் கூட்டுச் சதிகளுக்கும், வடக்கில் தமிழ் முதலாளி வர்க்கத்தின் சூழ்ச்சிகளுக்கும் எதிராக இந்திய, இலங்கை ஈழத் தாயக தொழிலாள வர்க்கத்தினை அணி திரட்டும் முன்நோக்கு இல்லாததால் விடுதலைப் புலிகள் அப்பிராந்தியத்தில் முதலாளித்துவ அரசினை மறு நிர்மாணம் செய்யும் பொறுப்பினை ஏற்க மேலும் மேலும் தள்ளப்பட்டு வந்தது.

முதலாளித்துவ அரசின் ஆளுமையை நிலை நாட்ட இந்திய — இலங்கை அரசாங்கங்களால் நியமனம் செய்யப்பட்ட வட — கீழ் மாகாண இடைக்கால நிர்வாகத்தில் பங்கு கொள்வதை விடுதலைப் புலிகள் இன்னமும் கொள்கை ரீதியில் பகிஷ்கரிக்கவில்லை.

இன்றைய நிலைமைகளின் கீழ் (விடுதலைப் புலிகள் தமது அரசியல் போக்கின் ஒரு பெறு பேருக) இந்திய இலங்கை முதலாளித்துவ அரசுகளை அரசியல் ரீதியில் சவால் செய்வதற்கு வேண்டிய தயாரிப்புக்களை செய்யும் வரை ஆயுதப் போராட்டத்தினை இடை நிறுத்திக் கொள்ள விடுதலைப் புலிகள் நெருக்கப்பட்டது என்ற நிலைப்பாட்டை ஒருவர் ஏற்றுக் கொள்ளினும், இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான விடுதலைப் புலிகளின் இரண்டுங் கெட்ட போக்கினை எப்படி விளக்குவது?

இடைக்கால நிர்வாகத்துக்கான சிபார்சு, விடுதலை யுத்தத்தினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெருமளவில் நாசம் ஆக்கப்பட்ட முதலாளித்துவ அரசினை மீளச் சிருஷ்டிக்கவே மூன் வைக்கப்பட்டு உள்ளது: முக்கியமான தமிழ் முதலாளித்துவக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி அடியோடு செல்வாக்கிழந்து உள்ளதால், விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் முதலாளித்துவ அரசின் ஆளுமையை மீள நிலை நிறுத்துவது சாத்தியமில்லை என்ற முடிவுக்கு இலங்கை, இந்திய அரசாங்கங்கள் இரண்டும் வந்துள்ளன.

ஒன்றில் விடுதலைப் புலிகள் முதலாளித்துவ அரசினுள் ஈர்க்கப்பட்டு விட வேண்டும் அல்லது இந்திய இராணுவத்தின் கரங்களால் அடியோடு நிர்மூலமாகுவதற்கு முகம் கொடுக்க வேண்டும் என்ற கையுறையை இந்திய முதலாளி வர்க்கம விடுதலைப் புலிகளை நோக்கி வீசி உள்ளது.

எனவே இந்த திட்டத்தின் ஒரு பாகமாக இரண்டு அரசாங்கங்களும் 3 விடுதலைப் புலிகளையும், 2 தமிழர் விடுதலைக் கூட்டணியினரையும் ஈரோஸ், சிங்களவர், முஸ்லிம்களிலிருந்து தலா ஒவ்வொருவரையும், வடக்கு, கிழக்கு மாகாணத்திலிருந்து இரண்டு அரசாங்க அதிபர்களையும் கொண்ட ஒரு இடைக்கால நிர்வாகத்தை அமைக்க முடிவு செய்தன.

இந்த நிர்வாகத்தின் திட்டவட்டமான பணி, இவ்விரு மாகாணங்களிலும் 'சட்டத்தையும் ஒழுங்கையும்' மீள நிலை நிறுத்துவதே. இது பொலிஸ் படைகளையும் முதலாளித்துவ அரசின் நிர்வாக சாதனங்களையும் மீள நிலை நிறுத்துவதை உள்ளடக்கியுள்ளது.

விடுதலைப் புலிகள் இந்த ஒழுங்கு முறைகளை கொள்கை அளவில் எதிர்க்கவில்லை; இந்த நிர்வாகத்தில் தனது பங்கினை அதிகரிக்கும் பேச்சுவார்த்தைகளில் இந்திய இலங்கை அரசாங்கங்களுடன் ஏற்கனவே ஈடுபட்டு உள்ளது.

## அரசும் புரட்சியும்

லெனின் தமது 'அரசும் புரட்சியும்' என்ற நூலில், சாதாரண சூழ்நிலைகளில் முதலாளித்துவ அரசின் 'ஒழுங்கு', 'வர்க்க ஒடுக்கு முறையை சட்ட ரீதியானதாக்கி நிலை நிறுத்துகின்றது' எனச் சுட்டிக் காட்டினார்: இன்றைய நிலைமையில் பழைய அரச இயந்திரம் சிதறடிக்கப்படாத விதத்தில் இது கூடவே தேசிய ஒடுக்கு முறையை சட்ட ரீதியான தாக்கி, நிலை நாட்டுகின்றது: இந்திய — இலங்கை உடன்படிக்கையின் கைச்சாத்து, இலங்கை அரசினை தேசிய, சமய சிறுபான்மையினரின் சமத்துவத்தை உத்தரவாதம் செய்த ஒரு முதலாளித்துவ ஜனநாயக குடியரசு ஆக்கி விட வில்லை இது முழு நாட்டினதும் வெகுஜனங்களின் முதுகின் பின்னால் இந்திய முதலாளி வர்க்கத்தின் நேரடி ஆயுத தலையீட்டின் மூலம் மேலிருந்து திணிக்கப்பட்ட ஒரு ஏற்பாடாகும்.

எனினும் இந்த நிர்வாகத்தில் பங்கு கொள்ளும்படி விடுதலைப் புலிகள் கேட்கப்பட்டதற்கு காரணம் வெகுஜனங்களின் ஜனநாயக சுதந்திரங்களை உத்தரவாதம் செய்வதற்கு அன்றி, ஆயுதப் போராட்டக் காலம் பூராவும் வெற்றி கொண்டு அனுபவித்து வந்த சகல சுதந்திரங்களையும் அடக்குவதே.

உண்மையில் அத்தகைய தொழிற்பாடுகளை அமுல் செய்வதற்கு விடுதலைப் புலிகள் இயக்க அங்கத்தினர்களிடையே காரசாரமான எதிர்ப்பிருந்து வருகின்றது. அந்த விதத்தில் அவர்கள் பல கருத்து வேறுபாடுகளை வெளிக்காட்டினர். வடக்கு, கிழக்கு வெகுஜனங்களை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொணர இந்திய இராணுவம் வழி சமைப்பதாக அவர்கள் குறிப்பிட்டனர்:

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் காரியாளர்களைப் படுகொலை செய்யும் தாக்குதல் கும்பல்களை இந்திய இராணுவம் அணி திரட்டி வரும் இத்தருணத்தில், இந்தச் சகல கருத்து வேறுபாடுகளையும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் 'ஜனநாயக விரோத பழக்க வழக்கங்களாக' இந்திய அதிகாரிகள் அர்த்தப்படுத்தி வருகின்றார்கள். பிரபாகரன், மீண்டும் ஒரு முறை இந்திய இராணுவத்தின் வர்க்கப் பண்பினை புறக்கணித்து விட்டு இந்திய இராணுவத்தினை தமிழ் மக்களின் காவலனாக சாயம் பூசிய போதிலும் தேசிய ஒடுக்கு முறையை எதிர்த்து ஆயுதம் தூக்கிய இந்தப் போராளிகள் சம்பந்தமாக இந்திய முதலாளி வர்க்கத்துக்கு அத்தகைய தடுமாற்றம் இருக்க வில்லை.

## 'ஹிந்து'

1987 செப்டம்பர் 7 ம் திகதிய 'ஹிந்து' பத்திரிகையின் முன்பக்க கட்டுரை, இந்தி முதலாளி வர்க்கத்தின் இந்த போக்கினை பின்வருமாறு சுட்டிக் காட்டியது.

''தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் உடன்படிக்கையை சிதைக்கவும், உள்ளூர் ஜனங்களுக்கும் அமைதி காக்கும் படைகளுக்குமிடையே கசப்புணர்வை வளர்க்கவும் முயல்வதாக கிடைத்து உள்ள அறிக்கைகளையிட்டு புதுடில்லி திகைப்படைந்து உள்ளது. உடன்படிக்கைக்கு கண்டனம் தெரிவிக்க கருத்தரங்குகள், ஆய்வு வட்டங்கள் (இவற்றில் விருப்பமில்லாதவர்கள் கலந்து கொள்ளும்படி நெருக்கப் படுகிறார்கள்) ஒழுங்கு செய்யப்படுவதோடு, இந்திய படைகளுக்கு எதிரான கவரொட்டி பிரச்சாரத்தை தென் மண்டலம் விசனத்துடன் கவனித்து கொண்டு

(4 ம் பக்கம் பார்க்கவும்)

படிப்பகம்

www.padippakam.com



# எம் - பண்டா: முதலாளி
# பரிந்துரையாளரின்

— கீர்த்தி பாலசூரிய

(இரண்டாம் பாகம்)

(அமெரிக்க ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் 1987 — 7

ள்ளது: தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வானொலியும் கூட உடன்படிக்கையை தாக்கி வருவதோடு தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யத் தவறியமை எனப்படுவதையிட்டு வெளிச்சம் போட்டு வருகின்றது.

''இவை எல்லாம் ஜனநாயக ரீதியில் இயங்குவது, எதிர் வரும் தேர்தலில் வெல்வது அல்லது கிழக்கு மாகாணத்தில் வெகுஜன ஆதரவை திரட்டுவது பற்றிய தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் இயலளவு சம்பந்தமாக ஒரு நம்பிக்கையீனத்தின் அறிகுறியாகவே இங்கே நோக்கப் படுகின்றது. சிங்களவர் முஸ்லிம்களுக்குப் புறத்தே தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், தமிழர் விடுதலைக் கூட்டணியினரை சேர்த்துக் கொள்ள திரு. ஜயவர்தன தயாராக உள்ள போதிலும் (தற்போதும் தேர்தலுக்கிடையேயும் தொழிற்பட உத்தேசிக்கப்பட்டு உள்ள) இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படாதது கணிசமான ஏமாற்றத்தை அளிக்கிறது.

''தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தனது பேராளர் பட்டியலை இன்னமும் கொடுக்கவில்லை: இதன் மூலம் உடன்படிக்கையின் அமுலை தாமதிக்கச் செய்கின்றது.

''அமைதி காக்கும் படை இலங்கையிலிருப்பது உடன்படிக்கையின் அமுலுக்கே அன்றி தமிழ் ஈழ விடுதலைப் புலிகளோ அல்லது வேறு ஏதும் கட்சிகளோ தேர்தலில் வெற்றி அடைய உதவுவதற்கு அல்ல என்பது சுட்டிக் காட்டப்பட்டு உள்ளது. இது தமிழர்களின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யும் மற்றொரு பணியையும் ஆற்றியுள்ளது:

''அமைதி காக்கும் படை கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டு மக்களின் ஆதரவைப் பெற்று உள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டு உள்ளது. ஆனல் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உள்ள சிலர் இதன் பொறுமை நிலையானதென கொள்ளலாம். தென் மண்டல கொமாண்டர் லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங், யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. சமீப கால அபிவிருத்திகளின் மத்தியில் இதுவோர் சிறப்பு முக்கியத்துவம் மிக்க விஜயம்.''

தமிழ் பகுதிகளில் இந்தியன் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு தயக்கத்துடன் ஆதரவு அளித்தும், தமிழர்களின் பாதுகாப்பு இன்று இந்திய இராணுவத்தில் தங்கியுள்ளது என பிரகடனம் செய்ததன் மூலமும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தனது சொந்த காரியாளர்களுக்கும் வெகுஜனங்களுக்கும் எதிரான தாக்குதலுக்கான கதவினை திறந்துள்ளது.

## கலப்பு

பண்டா ''தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த மட்டில் சுய நிர்ணயம் பேரம் பேசக் கூடியது அல்ல'' என்கிறார்; அதன் படி தமி



மைக்கேல் பண்டா

ழீழ விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு ஈடாட்டத்துக்கும் சரணடைவுக்கும் வெகுஜனங்களை அடிபணியும் படி கேட்கிறார். பண்டா, தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமான பாட்டாளி வர்க்கக் கொள்கைக்கும் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ கொள்கைக்குமிடையே வேறுபாட்டைக் காண்கிறாரில்லை. அவரைப் பொறுத்த மட்டில் சுய நிர்ணயத்துக்கான கோரிக்கை வர்க்க வேறுபாடுகளை கரைத்து விடுவதோடு இதற்காக வக்காலத்துவாங்கும் எவரும் தன்பாட்டில் தொழிலாளர்களின் பிரதிநிதியாகி விடுகின்றார்.

பண்டா, பின்தங்கிய நாடுகளில் தேசிய முதலாளித்துவத்தின் ஒரு அரசியல் கையாளாக மாறி, தேசிய விடுதலைப் போராட்டத்தில் தொழிலாள வர்க்கத்தின் முன்னணிப் பாத்திரத்துக்காகப் போராடும் புரட்சிகர மார்க்சிஸ்டுகளைச் சாடுகின்றார். தம்மால் முடிந்த மட்டும் தொழிலாள வர்க்கச் சுயாதீனமான அமைப்பினைச் சீர்குலைக்கவும், அதன் மூலம் ஜனநாயகப் புரட்சியைக் காட்டிக் கொடுக்கவும் பண்டா உதவுகின்றார்.

தேசிய இனப் பிரச்சினையில் தம்மை லெனினின் சீடராக காட்டிக் கொள்ள பண்டா முயன்ற போதிலும் அவர் லெனினிசக் கொள்கையின் சாராம்சத்தையிட்டு அதிர்ச்சிக்குரிய விதத்தில் அறிவிலி. லெனினின் கொள்கை எப்போதும், தேசிய இனப் பிரச்சினையில் பாட்டாளி வர்க்கத்துக்கும் குட்டி முதலாளி வர்க்கத்துக்கும் இடையேயான வர்க்க வேறுபாட்டை கணக்கில் கொண்டே கட்டி எழுப்பப்பட்டது:

''ஒவ்வொரு தேசிய விடுதலை இயக்கங்களின் ஆரம்பத்திலும் முதலாளி வர்க்கம் தலைவனாக வெளிப்படுவது இயற்கையே. சகல தேசிய அபிலாசைகளையும் நடைமுறையில் ஆதரிக்க சம்மதிக்கின்றது. (ஏனைய பிரச்சினைகளில் போன்று) தேசிய இனப் பிரச்சினையிலும் பாட்டாளி வர்க்கக் கொள்கை முதலாளி வர்க்கத்தை ஒரு திட்டவட்டமான போக்கிலேயே ஆதரிக்கின்றது. இது ஒரு போதும் முதலாளி வர்க்கக் கொள்கையுடன் ஒத்திருப்பதில்லை,

தேசிய சமாதானத்தை அடையவும், (அதனை முதலாளி வர்க்கம் பூரணமாக கொணர முடியாததோடு பூரண ஜனநாயக நடாக மட்டுமே அதனை அடைய முடியும்.) சம உரிமைகளைப் பெறவும், வர்க்கப் போராட்டத்துக்கு உகந்த நிலைமைகளைச் சிருஷ்டிக்கவும் மட்டுமே தொழிலாள வர்க்கம் முதலாளி வர்க்கத்தை ஆதரிக்கின்றது,

''ஆதலால் முதலாளி வர்க்கத்தின் நடைமுறைத் தன்மைக்கு எதிராக பாட்டாளி வர்க்கம் தனது அடிப்படைக் கொள்கைகளை தேசிய இனப் பிரச்சினையில் முன்வைக்கின்றது, அவர்கள் முதலாளி வர்க்கத்துக்கு எப்போதும் நிபந்தனையுடன் கூடிய ஆதரவை மட்டுமே வழங்குகின்றனர். தேசிய விவகாரங்களில் முதலாளி வர்க்கம் எப்பொழுதும் ஒன்றில் தனது சொந்த தேசிய இனத்துக்கான சலுகைகளுக்காக அல்லது பிரத்தியேகமான இலாபங்களுக்காக உந்தப்படுகின்றது.

இது 'நடைமுறையானது' என அழைக்கப்பட்டு வருகின்றது பாட்டாளி வர்க்கம் எப்பொழுதும் சகல சலுகைகளையும் சகல பிரத்தியேகங்களையும் எதிர்க்கின்றது. இது 'நடைமுறையானதாக, இருக்க வேண்டும் என எவர் கோருகின்றாரோ அவர் முதலாளி வர்க்கத்தின் அடிச்சுவட்டில் சென்று. சந்தர்ப்பவாதத்தினுள் வீழ்கின்றார்.

''ஒவ்வொரு தேசிய இனத்தினதும் பிரிந்து செல்லும் பிரச்சினையில் 'ஆமா' அல்லது 'இல்லையா' எனப் பதில் அளிக்கக் கோருவது மிகவும் 'நடைமுறையான'தாக தோன்றுகின்றது. யதார்த்தத்தில் இது அர்த்தம் அற்றது.. கோட்பாட்டில் இது பௌதீகவதிதமானது. நடைமுறையில் இது முதலாளி வர்க்கக் கொள்கைகளுக்கு தொழிலாள வர்க்கத்தை அடிமைப்படுத்துகின்றது. முதலாளி வர்க்கம் எப்பொழுதும் அதனது தேசிய கோரிக்கைகளை முன்னணியில் முன்வைக்கின்றது. அது அவற்றை உறுதியாக முன்வைக்கின்றது.

''பாட்டாளி வர்க்கத்துக்கு எவ்வாறு எனினும் இந்தக் கோரிக்கைகள் வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்கு கீழ்ப்பட்டவையே; ஒரு குறிதுகப்பட்ட தேசிய இனத்தின் பிரிந்து செல்லல் அல்லது

மற்றொரு தேசிய இனத்<br>
ஞன அதன் சமத்துவம்<br>
லாளித்துவ ஜனநாயகப்<br>
ட்சியை பூரணத்துவம்<br>
யும் என கோட்பாட்டு<br>
யில் ஒருவர் முன்கூட்டி<br>
உறுதி கூறி விட முடிய<br>
இவற்றில் எதுவெனி<br>
பாட்டாளி வர்க்கத்து<br>
முக்கியமானது, தனது<br>
க்த்தின் அபிவிருத்தியை<br>
தரவாதம் செய்வதே.

''முதலாளி வர்க்கத்<br>
பொறுத்த மட்டில் அத<br>
இந்த அபிவிருத்தி நோக்<br>
களுக்கு முன்னதாக<br>
'தனது' தேசிய இனத்<br>
நோக்கினை தள்ளி இ<br>
சிதறடிப்பது முக்கியம்.<br>
வேதான் பாட்டாளி<br>
கம் ஒரு தேசிய இனத்<br>
இழப்பில் எதனையும் வழ<br>
இணங்காமலும், எந்த<br>
சிய இனத்துக்கும் உ<br>
வாதங்கள் வழங்காம<br>
சுய நிர்ணய உரிமைக்க<br>
எதிர்மறை கோரிக்<br>
எல்லைக்குள் நின்று கொ<br>
ன்றது.

''இது நடைமுறை இல்<br>
ததாக இருக்கலாம். ஆ



ஜே. ஆர். ஜயவர்தன

யதார்த்தத்தில் சாத்தியமா<br>
எல்லா தீர்வுகளினும்<br>
ஜனநாயகமானதை அடை<br>
தற்கான சிறந்த உத்தர<br>
தம் இதுவே. சகல தே<br>
இனங்களதும் முதலாளி<br>
க்கங்கள் தனது சொந்<br>
நலன்களிற்கு — ஏனைய தே<br>
இனங்களின் நிலையை கண<br>
கில் எடுக்காமல் — உத்தர<br>
தம் வேண்டி நிற்கையி<br>
தொழிலாள வர்க்கமே<br>
இந்த உத்தரவாதத்தை<br>
டுமே வேண்டுகின்றது;

படிப்பகம்

# த்துவ தேசியவாதத்தின் முகமுடி கிழிக்கப்பட்டது

3 ம் பக்கத் தொடர்ச்சி

- 29 ம் திகதி புலட்டீன் பத்திரிகையிலிருந்து)

"முதலாளி வர்க்கம் குறிக்கப்பட்ட கோரிக்கையின் 'சேகரம் செய்யும்' தன்மையிலேயே அதிகம் அக்கறை காட்டுகின்றது. எனவே பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு குந்தகமான விதத்தில் ஏனைய தேசிய இனத்தின் முதலாளி வர்க்கத்துடன் இணக்கத்துக்கு வரும் கொள்கைகளை கொண்டுள்ளது. எவ்வாறெனினும் பாட்டாளி வர்க்கத்துக்கு அவசியமானது தனது வர்க்கத்தை முதலாளி வர்க்கத்துக்கு எதிராகப் பலப்படுத்துவதும், ஜனநாயகம், சோசலிசம் என்பவற்றில் இடைவிடாது கல்வியறிவூட்டுவதுமே",

(லெனின் — தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை)

ஒடுக்கும் தேசிய இனத்திலிருந்து ஒடுக்கப்படும் தேசிய இனம் பிரிந்து செல்லும் விடயத்தில் கூட, ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ தேசியவாதிகளின் வழியை நிபந்தனையின்றி பின்பற்ற முடியாது.

சுவீடனிலிருந்து பிரிந்து



ராஜீவ் காந்தி

செல்லும் பிரச்சினையில் நோர்வே தொழிலாளர்களின் பணியை தெளிவு படுத்துகையில் லெனின் குறிப்பிட்டவற்றை இங்கு திரும்பவும் சுட்டிக் காட்டுவது நன்மை பயக்கும்.

"தேசியங்கள் பிரிந்து செல்லும் பிரச்சினையால் தோன்றும் மோதுதல்களை தீர்ப்பதில்" மிகச் சிறந்த ஜனநாயக முறைக்கு உதாரணமாக அதனை லெனின் கையாண்டார்.

நோர்வே, சுவிடிஸ் தொழிலாளர்களின் உயிர் வாழும் நடவடிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட இந்த ஸ்தூலமான விடயம்' 'அத்வைதமாகவும், ஐக்கியப் பட்டதாகவும், அனைத்துலக பண்புடையதாகவும் இருக்கக் காரணம் நோர்வே தொழிலாளர்கள் பிரிந்து செல்லும் பிரச்சினையை நிபந்தனையுடன் கூடியதாக மட்டும் எழுப்புகையில், சுவீடிஸ் தொழிலாளர்களோ நோர்வேயின் பிரிந்து செல்லும் சுதந்தி த்தை நிபந்தனையற்றதாக வாதாடியதே;

"சுவீடிஸ் தொழிலாளர்கள் நோர்வேயின் பிரிந்து செல்லும் சுதந்திரத்தை நிபந்தனையின்றி ஆதரித்திருக்கா விட்டால் நோர்வேயை பலாத்கார யுத்தத்தின் மூலம்" 'வைத்திருக்க' விரும்பிய சோவினிச சுவீடிஷ் நிலப் பிரபுக்களின் சகாக்களாகவும், சோவினிஸ்டுகளாகவும் விளங்கியிருப்பர். நோர்வே தொழிலாளர்கள் பிரிந்து செல்லும் பிரச்சினையை நிபந்தனையுடன் எழுப்பியிராதுவிடின் — அதாவது: சமூக ஜனநாயகக் கட்சி அங்கத்தவர்கள் பிரிவினைக்கு எதிராக பிரச்சாரம் செய்யவும், வாக்களிக்கவும் கூட அனுமதித்திருக்காவிடின் அவர்கள் தமது அனைத்துலகவாதிகளது நிலைப்பாட்டிலிருந்து தவறியிருப்பர்; அத்தோடு முக்கிய முதலாளித்துவ நோர்வேயன் தேசியவாதத்தினுள் தலைமூழ்கிப் போயிருப்பர்.

"ஏன்? ஏனெனில் பிரிந்து செல்லல் முதலாளி வர்க்கத்தால் நிறைவேற்றப்பட்டதேயன்றி பாட்டாளி வர்க்கத்தினால் அன்று! ஏனெனில் நோர்வே முதலாளி வர்க்கம் (மற்றயவற்றைப் போலவே) தனது சொந்த தொழிலாளர்களுக்கும் 'அன்நிய' நாடுகளின் தொழிலாளர்களுக்கு மிடையே ஆப்பு வைக்க முயல்கின்றது. ஏனெனில், வர்க்க நனவுள்ள தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு ஜனநாயக கோரிக்கையும் (சுயநிர்ணயம் உட்பட) சோசலிசத்தின் மேலாய நலன்களுக்குக் கீழ்ப்பட்டதே.

"உதாரணமாக, சுவீடனிலிருந்து நோர்வேயின் பிரிவினை பிரித்தானியாவுக்கும் ஜேர்மனிக்குமிடையே யுத்தத்துக்கான நிச்சயத்தை அல்லது சாத்தியத்தை உருவாக்கியிருந்திருப்பின் நோர்வேயின் தொழிலாளர்கள் அக்காரணத்துக்காக மட்டும் பிரிவினையை எதிர்க்க வேண்டியிருந்திருக்கும்.

ஆனால் நோர்வேயின் பிரிந்து செல்லும் உரிமைக்காக சுவீடிஷ் அரசாங்கத்தை எதிர்த்து ஒழுங்கு முறையானதும், உறுதியானதும், தொடர்ச்சியானதுமான ஒரு போராட்டத்தினை அவர்கள் நடாத்தியிருந்தால் மட்டுமே சுவீடிஷ் தொழிலாளர்கள் சோசலிஸ்டுகளாக தொடர்ந்தும் இருந்த வண்ணம் பிரிந்து செல்லலுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யும் உரிமையையும், வாய்ப்பினையும்



பிரபாகரன்

கொண்டிருந்திருப்பர். இல்லையேல் நோர்வே தொழிலாளர்களும் மக்களும் சுவீடிஷ் தொழிலாளர்களின் ஆலோசனையை உண்மையானதாகக் கொள்ள முடியாது."
(லெனின் திரட்டிய நூல் தொகுதி — 23 — பக்கம் 57)

இம்மனோபாவம், லெனினிசக் கொள்கையின் பெரும் அக்கறைக்குரிய விடயத்திலிருந்து பெருக்கெடுக்கின்றது. லெனின் விளக்கியது போல் "ஏனைய சகல பிரச்சினைகளில் போலவே நாம் தேசியங்களின் சுயநிர்ணய பிரச்சினையிலும் ஒரு குறிக்கப்பட்ட தேசியத்தின் உள்ளே பாட்டாளி வர்க்கத்தின் சுயநிர்ணய உரிமையில் நாம் முதலும் முக்கியமாக அக்கறை கொண்டுள்ளோம்."

## குட்டி முதலாளித்துவ தேசியவாதிகள்

"தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவத்தி்கு எதிராக ஒரு வீரம் மிக்க போராட்டத்தை நடாத்திய போதிலும் அது தொடர்ந்தும் ஒரு குட்டி முதலாளித்துவ தேசியவாத இயக்கமாகவே இருந்து வந்தது அது இந்திய, இலங்கை தொழிலாளவர்க்கம் மீது ஒன்றில் குரோதமோ அல்லது அசிரத்தையோ கொண்டிருந்தது;

இந்த அசிரத்தையும் இந்த வர்க்க நிலைப்பாடுமே அதனை இந்திய முதலாளி வர்க்கத்தின் பொறிக் கிடங்கிற்கு இட்டுச் சென்றது. இந்த முழு வரலாற்று அனுபவத்திலும் அடங்கி உள்ள முக்கிய படிப்பினைகளை ஆராயாமல் பண்டா தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை புகழ்கின்றார். பாட்டாளி வர்க்கப் புரட்சியைப் புதைக்க வேண்டியதன் அவசியத்தை நிரூபிப்பதற்கு மற்றுமோர் உதாரணத்தை இங்கு தாம் கண்டு விட்டதாக நம்புவதே இதற்குக் காரணம். எனவே அவர் கூறுகின்றார்:

"பிரபாகரனும், ஏனைய தோழர்களும், அன்ரன் பாலசிங்கமும் தமிழ் அரசியலுக்கு மட்டும் அன்றி, முழு இலங்கை அரசியலுக்கும் செய்த பங்களிப்பை பற்றி இதை நான் குறிப்பிட வேண்டும்: அவர்கள் பாராளுமன்ற அரசியலின் நாற்றமெடுக்கும் விளையாட்டுக்களுக்கு நிரந்தரமாக முடிவு கட்டி உள்ளனர்.

"பழைய தொழிற் சங்கத் தலைவர்களதும், தொழிற்சங்க வடிவிலான போராட்டங்களதும் பாசாங்குகளை அம்பலப் படுத்தி உள்ளனர். இலங்கையில் பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் தமிழ்ப் புலிகளுக்கு 100 வீதம் ஆதரவாக எழுந்து நிற்க எந்த இடதுசாரியும் தயாராக இல்லாததற்கு ஏதும் ஒரு காரணம் இருப்பின், அது இன்று இலங்கையில் எந்தவொரு பிரச்சினையும் வாக்குச் சீட்டுப் பெட்டி மூலமோ அல்லது மறியல் போராட்டம் மூலமோ தீர்க்கப்பட முடியாது என்பதை அவர்கள் அறிந்ததே;

"எழுப்பக் கூடிய ஒரே வழியில் — தமிழ்ப் புலிகளின் போராட்டம் ஊடாக அவர்கள் பிரச்சினையை எழுப்பி உள்ளார்கள்; இன்றிலிருந்து இலங்கையில் உலகின் ஏனைய பாகங்களில் போன்று பிரச்சினை ஆயுதப் போராட்டத்தின் மூலம் மட்டுமே தீர்க்கப்பட முடியும். நீங்கள் ஒன்றில் ஆயுதப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் அல்லது அதனை எதிர்க்க வேண்டும் (கைதட்டல்) அந்த நாட்டில் எவருக்கும் மூன்றுவது பாதை கிடையாது."

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முதலாளித்துவ அரசின் ஆளுமையை மீள ஸ்தாபிதம் செய்வதில் தோள் கொடுக்கும் வண்ணம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் எங்ஙனம் நெருக்கப்பட்டு உள்ளது என்பதை ஏற்கனவே சுட்டிக் காட்டினோம் இந்த அனுபவம், பண்டாவின் விவாதங்களுக்குப் பின்னால் உள்ள வங்குரோத்தினை நன்கு நிரூபிக்கின்றது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், திட்டவட்டமான வரலாற்றினால் தரப்பட்ட நிலைமைகளினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட போராட்ட வடிவமாக ஆயுதப் போராட்டத்தை நடா

(6 ம் பக்கம் பார்க்கவும்)

www.padippakam.com



14

# எம் - பண்டா: முதலாளித்துவ . . .

[5ம் பக்கத் தொடர்ச்சி]

த்தியது: அது ஒரு போதும் "பாராளுமன்ற அரசியலின் நாற்றமெடுக்கும் விளையாட்டுக்களுக்கு' இணங்கியதுமில்லை அதைத் தாண்டிச் செல்ல முயன்றதுமில்லை.

முதலாளித்துவ ஆட்சியின் ஒரு குறிப்பிட்ட வடிவம் என்ற முறையில் பாராளுமன்ற வடிவினை, ஜனநாயகத்தின் ஒரு மேலாய வடிவத்துக்கு வெகுஜனங்களை அணிதிரட்டுவதன் ஊடாக மட்டுமே தாண்ட முடியும். அதாவது முதலாளித்துவ அரசினை நிர்மூலமாக்கி, சோவியத் ஆட்சி மூலம் தேடிக்கொண்ட பாட்டாளி வர்க்க ஜனநாயகம். இப்பிரச்சினைகளைப் பற்றிப் பண்டாவுக்கு அக்கறையே கிடையாது;

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் வர்க்கப் போராட்டத்தின் சகல வடிவங்களையும் மிகக் குறிப்பாகச் சொன்னால் தொழிலாள வர்க்கத்தின் முதலாளித்துவச் சுரண்டல் நிலைமைகளினால் தோன்றும் வேலை நிறுத்தங்கள், தொழிற்சங்கப் போராட்டங்கள் மறியல் போராட்டங்கள் போன்ற குறிப்பிட்ட வடிவிலான போராட்டங்களை நிரந்தரமாகப் புதைத்து விட்டதாக எண்ணி பண்டா விசர்த்தனமாக மகிழ்ச்சியடைகின்றார்.

பண்டாவுக்கு பதில் அளிக்கையில் நாம் இந்த முதலாளித்துவத்தின் கடைகெட்ட பரிந்துரையாளரும் மனித இனத்தின் அபிவிருத்தியின் கூட்டு மொத்தமாக தேசிய அரசுகளை வழிபடுபவருக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் ஒரு தேசிய விடுதலை இயக்கமான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தக்கும் இடையே ஒரு தெளிவான வேறுபாட்டை ஏற்படுத்தும் வண்ணம் நெருக்கப்பட்டுள்ளோம். இந்த விடுதலை இயக்கத்தில் ஆயிரக்கணக்கான போராளிகள் தொழிலாள வர்க்கத்தின் வர்க்கப் போரரட்டத்தின் அபிவிருத்தியை எளிதாக்கும் ஒரு கருவியாக தேசிய விடுதலை யுத்தத்தில் ஈடுபட்டு உள்ளனரே அன்றி அதையே முடிந்த முடிவாகக் கொள்ளவில்லை.

ஒரு புரட்சிகர வர்க்கம் என்ற முறையில் தொழிலாள வர்க்கம் செத்து விட்டது எனவும் முதலாளி வர்க்கம் கூலி உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையேயான குரோதங்களை சீராக்கும் ஒரு விதி முறையைக் கண்டு பிடித்து விட்டது எனவும் முடிவு கட்டிய ஒரு குட்டி முதலாளித்துவ 'பிலிஸ்தீன்' மட்டுமே அங்ஙனம் உழற முடியும்.

இந்த முன்நோக்கின் அடிப்படையில் தேசிய இயக்கத்துக்கான பண்டாவின் ஆதரவு — தமிழ் தேசிய இயக்கம் உட்பட — முற்றிலும் புதிய பரிமாணத்தை பெறுகின்றது. அவரைப் பொறுத்த மட்டில், ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை உள்ளடங்கலான ஜனநாயக உரிமைக்கான போராட்டங்கள், முதலாளித்துவத்தை எதிர்த்து போரிடுவதற்கான அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் பெரும் ஐக்கியத்தை தயார் செய்வதற்கான ஒரு கருவியாக அன்றி, தொழிலாள வர்க்கத்தின் மேல் முதலாளி வர்க்கத்தின் மேலாதிக்கத்தை நிலை நாட்டுவதற்கான ஒரு கருவியாகப் படுகின்றது.

லெனின் கூறியதாவது: ''ஜனநாயகம் வர்க்க ஒடுக்கு முறையை ஒழித்து விடாது என்பதை மார்க்சிஸ்டுகள் அறிவர். இது வர்க்கப் போராட்டத்தை மேலும் நேரடியானதாகவும், பரந்ததாகவும் நன்கு திறந்ததாகவும் ஆக்கி விடுகின்றது. எமக்கு அது தான் வேண்டும். விவாகரத்துக்கான சுதந்திரம் எவ்வளவுக்கு முழுமையாக இருக்கிறதோ அவ்வளவுக்கு பெண்கள், அவர்களின் 'வீட்டு அடிமைத் தனத்துக்கான' மூலம் உரிமைகளின் குறைபாடுகள் அன்றி முதலாளித்துவமே என்பதை தெளிவாக காண்பர், அரசாங்க அமைப்பு எவ்வளவுக்கு ஜனநாயகமானதாக உள்ளதோ அவ்வளவுக்கு தொழிலாளர்கள் தீங்குகளின் அடிவேர், உரிமைகளின் குறைபாடுகள் அன்றி முதலாளித்துவமே என்பதை தெளிவாகக் காண்பர். எவ்வளவுக்கு தேசிய சமத்துவம் (பிரிந்து செல்லும் சுதந்திரமின்றி இது பூர்த்தியாகாது) முழுமையாக இருக்கிறதோ அவ்வளவுக்கு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தொழிலாளர்கள், தமது ஒடுக்கு முறைக்கான காரணம் உரிமைகளின் குறைபாடுகள் அன்றி, முதலாளித்துவமே என்பதை காண்பர்.''

இல்லை., பண்டா இம்முன்நோக்கினை ஆதரித்ததில்லை. ஒடுக்கப்படும் வெகுஜனங்களின் மீட்சி முதலாளித்துவத்தை தூக்கி வீசுவதில் அன்றி ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் தனியான தேசிய குட்டி அரசுகளை சிருஷ்டிப்பதே என அவர் சிந்தக்கின்றார். பண்டாவின் கருத்துப்படி அவை வர்க்க 'சமாதானத்தை' கொணரும் அல்லது 'தொழிற்சங்கப் போராட்டங்களுக்கும் மறியல் போராட்டங்களுக்கும் நிரந்தரமாக முற்றுப் புள்ளி வைக்கும்''!

இலங்கை தொழிலாள வர்க்கம் முழுவதையும் இனவாதிகளாக சாயம் பூசுவதும், தெற்கில் இடம் பெறும் வர்க்கப் போராட்டங்களில் கவனம் செலுத்த வேண்டாம் என தமிழர்களை கோரும் முழுப் பிற்போக்கு முறையீடுகளும் அவரின் திட்டமிட்ட அவநம்பிக்கையை காட்டுகின்றது.

உதாரணமாக, அவர் கூறியதாவது: ''இலங்கையில் பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் தமிழ்ப் புலிகளுக்கு 100 வீதம் ஆதரவாக எழுந்து நிற்க எந்த இடதுசாரியும் தயாராக இல்லாததற்கு ஏதும் ஒரு காரணம் இருப்பின் அது இன்று இலங்கையில் எந்தவொரு பிரச்சினையும் வாக்குச் சீட்டுப் பெட்டி மூலமோ அல்லது மறியல் போராட்டம் மூலமோ தீர்க்கப்பட முடியாது என்பதை அவர்கள் அறிந்ததே.''

இது திரும்பவும் அசாதாரணமானதாகும். எவரேனும் இதற்கு பாராளுமன்ற சீர்திருத்தவாத நப்பசைகளிலிருந்து மக்கள் இன்னமும் உடைத்துக் கொள்ளாததும் தொழிலாள வர்க்கத் தலைமை நெருக்கடியில் இருந்து அவர்கள் இன்னமும் விடுபடாததுமே காரணம் எனக் கூறின் அது அரசியல் ரீதியில் சரியானதாகும். அத்தோடு இது சமசமாஜ, ஸ்டாலினிச மத்தியவாதத் துரோகிகளின் முகமூடிகளை களையும் புரட்சிகர வேலைக்கான முன்நோக்கினையும் ஆரம்பித்து வைக்கும்.

ஆனால் பண்டா முற்றிலும் வேறானதைக் கூறுகின்றார். சுருங்கச் சொன்னால், பாராளுமன்றம், சீர்திருத்தவாதம் மூலம் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது என்பதை வெகுஜனங்கள் நன்கு அறிவார்கள் ஆதலால் அவர்கள் தமிழ் பிரச்சினைக்கு புறமுதுகு காட்டுகின்றார்கள். எனவே புரட்சியாளர்கள் தமது எதிர்ப்பினைக் காட்ட பழைய தனியார் பயங்கரவாத விதிமுறைகளை புதுப்பிப்பதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியாது! அனைத்துலகத் தொழிலாள வர்க்க ஐக்கியம் பற்றிய எந்தவொரு முன்நோக்கும் உதவாக்கரையானது!

தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரப் பாத்திரத்தினை அடிப்படையாக் கொண்ட மார்க்சிசத்தின் முழுப் போதனைகளும் தகர்ந்து விட்டன எவரேனும் அந்த ஆய்வுகளை இலங்கை தொழிலாள வர்க்கத்துக்குப் பிரயோகம் செய்யின் அது ஏனைய நாடுகளின் தொழிலாள வர்க்கத்துக்கும் கட்டாயம் பிரயோகிக்கப்பட வேண்டும்.

குறைந்தபட்சம் 1970 க்குப் பின்னர் பண்டா பாட்டாளி வர்க்கத்தின் புரட்சித் தலைமை நெருக்கடி பற்றிய பிரேரணையில் இருந்து விலகியதன் பின்பு இம்முடிவுக்கே வந்தார். இறுதியில் இது 1986 பெப்ரவரியில் ட்ரொட்ஸ்கிசத்துக்கு எதிரான அவரின் பகிரங்கத் தாக்குதலின் உள்ளடக்கம் ஆகியது.

தொழிலாள வர்க்கத்தின் பால் பண்டா காட்டும் மனமுறிவு வெறுப்பானது அவரை எதிர்ப்புரட்சி வாந்தி எடுக்கத் தள்ளுவதோடு, அது குட்டி முதலாளித்துவத்தின் தீவிர வலதுசாரி இயக்கத்தின்பால் அவரை கவர்ந்து இழுக்கின்றது. உயர்கட்ட சமூக அபிவிருத்திக்கு பரிணமம் அடைவதை சாத்தியம் ஆக்கும் பாட்டாளி வர்க்க வர்க்கப் போராட்டத்தில் இருந்து பிளவுண்டு கொண்டுள்ள பண்டா, இன்று சகல அரசியல் சமூக தோற்றப் பாடுகளை வெறும் ஒழுக்கவியல் அளவுகோல் மூலம் நோக்குகின்றார்.

அவரின் பேச்சின் ஒரு கட்டத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

''நூற்றுக்கணக்கான பாடசாலைச் சிறுவர்கள் மக்கள் விடுதலை முன்னணியினருடன் காடுகளுக்குள் தலைமறைவாகினர். 1971 ல் மக்கள் விடுதலை முன்னணியுடன் தாமும் முடிந்து விட்டதாக அவர்கள் நினைத்தனர். அவர்கள் மடியவில்லை. அது சும்மா தலைமறைவாகியது. இது ஓர் வித்தியாசமான இயக்கம் மக்கள் விடுதலை முன்னணியில் 300,000 க்கும் மேற்பட்டோர் சம்பந்தப்பட்டு உள்ளனர். உண்மையில் அவர்கள் அரசியல் விடயங்களில் அவ்வளவு தெளிவாக இல்லை ஆனால் அவர்கள் எதையோ பிரதிநிதித்துவம் செய்கிறார்கள். பழைய தீவிரவாத முதலாளித்துவ ஜனநாயக பாராளுமன்ற பாதையிலான வாழ்க்கையை அவர்கள் அடியோடு நிராகரிப்பதோடு அரசுடனான கணக்கு வழக்குகளை தீர்த்துவிட முயல்கின்றார்கள்.

''அந்த விடயத்தில் மட்டும் அதைப் புரிந்து கொள்வது நல்லது. இது இலங்கைக்கு மட்டும் ஏதோ தனித்துவமானது அல்ல. இது உலகம் பூராவும் பரவி வருகின்றது. நீங்கள் இதனை

(7 ம் பக்கம் பார்க்கவும்)

புரட்சிக் கம்யூனிஸ்ட்
கழகத்தின் முன்நோக்கும்
பணிகளும்
நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்
குழுவின் அறிக்கை 10-10-1986
1,-DM

*This pamphlet can be ordered from*

***Neue Arbeiterpresse***
*Alfredstr. 71*
*D-4300 Essen 1*
*West-Germany*

**Pour commander, écrire à**
**Marxisme Révolutionnaire**
**B.P. 388**
**75626 Paris Cedex 13**

*Please pay DM 1,- plus DM 0,50 postage*
*to account no. 211 85-431, Postgiroamt Essen*

www.padippakam.com



# எம் - பண்டா: முதலாளித்துவ . . .

[6ம் பக்கத் தொடர்ச்சி]

போருட்டில் காணலாம்: இதனை நீங்கள் பிலிப்பைன்சில் காணலாம். ஏனைய பல நாடுகளிலும் இதைக் காணலாம். மேற்கு ஐரோப்பாவையும் பெரிய பிரித்தானியாவையும் இது தாக்க அதிக காலம் எடுக்காது.

இன்று மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் வேலைத்திட்டம் என்ன? பண்டாவுக்கு இதில் அடியோடு அக்கறை இல்லை, பண்டாவை அவ்வளவு தூரம் கவரும் மக்கள் விடுதலை முன்னணியின் அம்சங்களை பார்ப்போம்; முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயக வழியை இது அடியோடு நிராகரிப்பதை பிரதிநிதித்துவம் செய்கின்றது. அத்தோடு இது அரசுடனான கணக்குகளை தீர்க்க முயல்கின்றது. அதே சமயம் அவர்கள் 'அரசியல் விடயங்களில் தடுமாற்றம் கண்டுள்ளனர்''.

மேலே சொன்ன மூன்று அம்சங்களிலும் பண்டா இலகுவில் ஒரு பாசிச இயக்கத்துக்கும் ஆதரவு வழங்க முடியும். மக்கள் விடுதலை முன்னணி ஒரு பாசிச இயக்கமாக இல்லாத போதிலும் இது தொழிலாள வர்க்கத்துக்கு பாரிய ஆபத்தினை — கம்போடியாவில் பொல் பொட்வாதம் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தியது போன்ற ஆபத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் முழு அரசியல் வேலைத்திட்டமும் சிங்கள குட்டி முதலாளி வர்க்கத்தினது குறைபாடுகளின் மீது கட்டி எழுப்பப்பட்டு உள்ளது. இந்த வேலைத்திட்டத்தின் முக்கிய பாகம் தமிழர் விரோத தேசிய வெறியே. கடந்த காலத்தின் போது இவர்கள் தமிழ் தேசிய விடுதலை இயக்கத்துக்கு எதிரான முழு அளவிலான யுத்தத்தின் வெறி பிடித்த வக்கீல்களாக விளங்கினர்.

யூ. என் பி. அரசாங்கத்துக்கு எதிரான அவர்களின் எதிர்ப்பு, தமிழர்களின் கோரிக்கைகளுக்கு யூ. என். பி. இணங்கி போகின்றது' என்பதை அடிப்படையாகக் கொண்டே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

ஜூலை 29 ல் இந்திய — இலங்கை உடன்படிக்கை கைச்சாத்தாகும் வேளையில் அவர்கள் பின்வரும் சுலோகங்களுடன் ஒரு அறிக்கையை வெளியிட்டனர்.

- ''நாட்டைக் காட்டிக் கொடுக்கும் இரகசிய ஒப்பந்தத்துக்கு இடமளிக்காதே!
- துரோகி ஜே. ஆரை வெளியேற்று!
- கொலைகாரன் பிரபாகரனை தூக்கிலிடு!
- கட்சி வேறுபாடுகளுக்கிடையேயும் தாய் நாட்டை காக்க சகல தேசாபிமானிகளும் ஐக்கியப்பட வேண்டும்.''

இந்த அறிக்கை ''வணக்கத்துக்குரிய பிக்குகளுக்கும் தேசாபிமான மக்களுக்கும் எதிர்க்கட்சிகளில் உள்ள சகல தேசாபிமானிகளுக்கும் அத்தோடு யூ. என். பி. யில் உள்ள சகல தேசாபிமானிகளுக்கும்'' விடுக்கப்பட்டது.

தமிழர் விடுதலையின் ஆதரவாளராகக் காட்டிக் கொள்ளும் ஒருவர் அதே உற்சாகத்துடன் சிங்கள குட்டி முதலாளித்துவத்தின் தமிழர் விரோத இனவாத இயக்கத்தை ஆதரிப்பது எப்படி என ஆச்சரியப்படலாம். பண்டாவின் வேலைத்திட்டத்தில் உள்ள அத்தகைய முரண்பாடுகளை ஒடுங்கிப் போகும் முதலாளித்துவத்தின் தர்க்கத்தின் அடிப்படையில் பார்த்தாலே விளங்கிக் கொள்ள முடியும். இது பின்தங்கிய நாடுகளிலும் அத்தோடு முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும் உலக பொருளாதாரத்தின் ஐக்கியத்தை நாசமாக்கும் படு பிற்போக்கு இயக்கங்களின் எழுச்சிக்கு இடமளிக்கிறது.


## தொழிலாள வர்க்கம்

உலகப் பொருளாதாரத்தை ஒன்றிணைக்கக் கூடியதுடன் மட்டும் அன்றி மனித இனத்தின் கலாச்சார அபிவிருத்தியை மேலும் மேல் நோக்கி தள்ளக் கூடியதுமான ஒரே சக்தியான தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரப் பாத்திரம் நிராகரிக்கப் படின், சகல உக்கிரமான பிரச்சினைகளுக்கும் உலக பொருளாதாரத்தை தன்னியக்கம் ஆக்குவதே 'தீர்வு' என ஏற்றுக் கொள்வதற்கான கதவுகள் தவிர்க்க முடியாத வகையில் திறக்கின்றன.

1930 ம் ஆண்டுகளின் உலகப் பொருளாதார நெருக்கடியின் உச்சக் கட்டத்தில் ட்ரொட்ஸ்கி 'தேசியவாதமும் பொருளியல் வாழ்வும்' என்ற நூலில் 'அதன் காலத்தில் ஜனநாயக தேசியவாதம் மனித இனத்தை முன் நோக்கி கொண்டு சென்றது. இன்றும் கூட கிழக்கில் காலனித்துவ நாடுகளில் ஒரு முற்போக்குப் பாத்திரத்தை வகிக்க இலாயக்கானதாக உள்ளது.'' எனக் குறிப்பிட்டார்.

எவ்வாறெனினும் அநேக காலனிகள் 'சுதந்திரம்' அடைந்ததன் பின்னர் — இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் இருந்து பின்தங்கிய நாடுகளில் தேசியவாதம் சொல்லி அடங்காத அளவுக்கு நாற்றமெடுத்தது: முதலாளி வர்க்கத்தின் கரங்களில் உற்பத்திச் சக்திகளின் பேரளவு அபிவிருத்திக்கு சாத்தியமான முறையில் பல ஒடுக்கப்படும் தேசியங்களை பாரிய ஜனநாயக ஐக்கியத்தினைக் கொண்ட குடியரசுகளை அமைப்பதற்கு அணி திரட்டும் ஒரு சுலோகமாக இது மாறவில்லை.

இது ஒருவரோடு ஒருவர் போரிடவும் இனவாத பதட்ட நிலையை உருவாக்கவும்



லெனின்

பெரிய ஏகாதிபத்திய எஜமான்களின் மேசையில் இருந்து அற்ப வசதி வாய்ப்புக்களை பிடுங்கிக் கொள்ள தொழிலாள வர்க்கத்தை கூறு போடவும் ஓர் ஆயுதமாக பரிணமம் செய்யப்பட்டது.

1970 ம் ஆண்டுகளின் ஆரம்ப காலங்களில் பண்டா தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மூர்க்கமாக எதிர்த்தார் அவரின்படி தொழிலாள வர்க்கத்தினால் முன்வைக்கப்பட்ட அத்தகைய கோரிக்கைகள் தேசிய அரசின் ஐக்கியத்தை சிதறடிப்பதோடு, இலங்கையை ஏகாதிபத்தியம் கூறு போடவும் இடமளிக்கும்.

1971 — 72 பங்களாதேஷ் விடுதலை யுத்தத்தின் போது பண்டா இந்திய ஆளும் வர்க்கத்தின் பங்களாதேஷ் இணைப்புக்கு ஆதரவு அளித்தார். இந்த இணைப்பு ஏகாதிபத்தியத்தை எதிர் கொள்ள பேரளவிலான ஐக்கியத்தை சிருஷ்டிக்கும் என்றார். இதே பாணியில் 1979 ல் கிழக்கு ரீமோரில் விவசாயிகளின் கிளர்ச்சியை இரத்தத்தில் மூழ்கடிக்க சுகார்ட்டோவின் தேசியவாதத்துக்கு ஆதரவு அளித்தார்.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவே அல்லது ஒடுக்கப்படும் மக்களின் பேரளவிலான ஜனநாயக ஐக்கியத்தினை நோக்கியோ வழி நடத்தப்படாத இந்த தேசிய முதலாளி வர்க்கத்தின் பிற்போக்கு தேசிய வாதம், அநேக ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் கிளர்ச்சிக்கு வழி வகுத்தது. தமிழ் தசிய இயக்கம் அதில் ஒன்று மட்டுமே

பண்டாவும் இந்த தேசிய இயக்கங்களின் குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளும் தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவ அரசினை தூக்கி வீசும் படி கோரியதில்லை ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் தனியான உள்ளூர் சந்தைகளை சிருஷ்டிப்பதிலேயே ஈடுபட்டனர். இதன் மூலம் மனித இனத்தின் எதிர்கால அபிவிருத்திக்கு பல்லின அரசு ஒரு மாதிரியாகக் கொள்ளப்பட்டது. இந்த 'வீடு நோக்கிய' பயணத்தில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் தனியான அரசுகளை கோருவதில் எதுவித முரண்பாடுகளுமில்லை. என்வே பண்டா தமது பயணத்தை 'உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்' என்பதில் இருந்து 'உலகத் தொழிலாளர்களே பிளவுண்டு போங்கள்'! என்பதில் பூர்த்தி செய்கின்றார்.

எவ்வாறெனினும் இந்த முழு அனுபவமும் புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் வேலைத்திட்டத்தில் சுயநிர்ணய உரிமை கோரிக்கையை செல்லத்தகாததாக்கி விடவில்லை ஆனால் இந்த கோரிக்கையை குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளும், பண்டா போன்ற அவர்களின் பரிந்துரையாளர்களும் வேசையாடுவதை அம்பலப்படுத்த மூர்க்கமாக போராட வேண்டியுள்ளது.

முதலாளித்துவ அரசினை தூக்கி வீசவும், பாட்டாளி வர்க்க சர்வாதிகார பதாகையின் கீழ் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் நசுக்கப்படும் மக்களை அணி திரட்டவும் செய்யும் போராட்ட அடிப்படையில் மட்டுமே இது புரட்சிகர அர்த்தம் பெறுகின்றது. அல்லது ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டவாறு:

''சுயநிர்ணய அடிப்படைக் கொள்கைகளை நாம் அங்கீகரிப்பதுடன் மட்டும் அன்றி எப்போதெல்லாம் இது நிலமானித்துவ, முதலாளித்துவ ஏகாதிபத்திய அரசுகளுக்கு எதிராக தொடுக்கப்படும் போதெல்லாம் நாம் பூரண ஆதரவும் அளிக்கின்றோம். ஆனால் முதலாளி வர்க்கத்தின் கரங்களில் சுயநிர்ணய கட்டுக் கதைகள் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு எதிரான ஆயுதமாக மாறும் போது நாம் இந்த கட்டுக் கதைகளை 'முதலாளித்துவத்தால் தவறான வழியில் திருப்பப்பட்ட ஜனநாயக கொள்கைகளாக' காண்பதை விட வேறு விதத்தில் நாம் கருதுவதே கிடையாது''.

(ட்ரொட்ஸ்கி: சமூக ஜனநாயகமும் தலையீட்டு யுத்தமும்: ருஷ்யா 1918 — 21 பக்கம் 94)

— முற்றும் —

படிப்பகம்

www.padippakam.com



16

# காந்தியின் பிற்போக்கு . .

(முன் பக்கத் தொடர்ச்சி)

சில காலங்களுக்கு முன் அவர்களால் ''பங்கிடிகி'' யாக பொய்யாக தாக்கப்பட்ட ஜே. ஆர். ஜயவர்தனவுடன் இணைந்த வண்ணம் தமிழ் ஈழ விடுதலைப் புலி இயக்கத்தினை சி. ஐ. ஏ. ஆதரவாளர் என இவர்கள் தாக்கி வருகின்றனர்.

ஸ்டாலினிஸ்டுகள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியை ''அமெரிக்க எதிர்ப்பு'' முற்போக்காளராக' புகைப்படம் பிடித்து உள்ளது ராஜீவ் காந்தி தாம் அமெரிக்க ஏஜந்தென மிக சந்தோஷமாக வெளிப்படுத்தி காட்டி உள்ள சமயத்திலேயே இது நிகழ்ந்து உள்ளது. பொதுநலவாய நாடுகளின் மகாநாட்டிற்கு சென்று இருந்த சமயம் றீகனது அழைப்பின் பேரில் வாஷிங்டன் வெள்ளை மாளிகைக்கு சென்ற ராஜீவ் காந்தி தமது நாடு திரும்பிய பின் கூறிய அறிக்கையை ''த இந்து'' பத்திரிகை இங்ஙனம் கூறுகின்றது:

''எம்மால் பெரும் காரியம் நிறைவேற்றப்படுவது அமெரிக்காவுக்கு அவசியமாயுள்ளது என ராஜீவ் கூறுகிறார். வாஷிங்டனில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதி றொனல்ட் றீகன் தம்முடன் நடத்திய பேச்சுவார்த்தையினை பற்றி கூறும் போது சாதகமான கருத்தை மீண்டும் வெளியிட்ட பிரதமர் ராஜீவ் காந்தி அமெரிக்கா தனது சுய கருத்தை தற்போது மாற்றி உள்ளது என்றும் இந்தியாவால் தமக்கு வேண்டிய பெரும் காரியம் நிறைவேற்றபட வேண்டியது அவசியமாயுள்ளதென அமெரிக்கா கருதுவதாயும் கூறினர்.

பிரதமர் தமது சுய ''கருத்தை நிலைநாட்டும் முகமாக இந்து லங்கா ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா வழங்கிய ஆதரவையும் சுட்டிக் காட்டினர்.'' (த இந்து 1987 அக்டோபர் 28)


ஸ்டாலினிஸ்டுகளின் மூடிமறைப்பினை பெற்ற இந்திய ஆக்கிரமிப்பு படை யாழ்ப்பாண நகரில் நடத்திய பெரும் கொலைகளின் பின் தற்போது யாழ் குடா நாடு மீண்டும் சீலீடப்பட்டு மீண்டும் சாதாரண குடிமக்கள் விசாரிக்கப்படும் வேலைத்திட்டம் செயற்படுத்த படுகின்றது. சாவகச்சேரி நகரில் நடந்த விமானத் தாக்குதலினுல் சாதாரண குடிமக்கள் 27 பேர் அவ்விடத்திலேயே இறந்து உள்ளனர் என இந்திய நிருபர்களே தெரிவித்துள்ளனர்.

லட்சக்கணக்கான குடிமக்கள் இன்னமும் பட்டினி, வைத்திய மருந்து வசதியின்மைக்கு ஆட்பட்டுள்ளனர்.

இந்திய ஆட்சியாளர் இத்தகைய அழிவின் மத்தியில் எல். ரி. ரி. ஈ. தலைமைத்துவத்தை தமது சுய பிற்போக்கு வேலைத்திட்டத்திற்கு கீழ்ப்பட்டு கைப்பொம்மையாளராக விளங்கும் மாறு மீண்டும் ஆலோசனை வழங்கி நிர்ப்பந்திக்கின்றனர். இன்று இந்த வேலைத்திட்டத்தில் கூட்டுச் சேரும் எந்தவொரு நபரும் இந்திய இலங்கை ஒப்பந்தத்திஞல் நிகழ்ந்த கொலைகளுக்கு இலக்கானவர்களில் உடல்களின் மேல் நின்று கேவல சேவையாற்றுபவராகவே முன்நிற்பார்கள்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை பெரிதும் வரவேற்ற இலங்கை ஆசிரியர் சங்கம், அ. லி. சே சங்கம், நவசம சமாஜ கட்சி தலைமைகளும் அவர்களுக்கே உரித்தான பாணியில் வடக்கு கிழக்கு கொலைகளையிட்டு மௌனம் சாதிப்பதன் மூலம் ஆதரவு வழங்குகின்றனர்.

## கெல்பான்ட் வழக்கு




அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சித் தலைமையின் எப். பி. ஐ. ஏஜன்டுகளுக்கு எதிராக அக்கட்சியின் முன்னுள் உறுப்பினர் அலன் கெல்பான்டினுல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விபரங்களைக் கொண்ட புத்தகங்கள் — இரு பாகங்கள் வெளி வந்து உள்ளன. கட்சியில் இருந்து கெல்பான்ட் விலக்கப்பட்டதை அடுத்து அவர் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினதும், அமெரிக்க லேபர் லீக்கினதும் ஆதரவுடன் இவ்வழக்கினை தாக்கல் செய்தார். இப் புத்தகங்கள் வழக்கின் சாட்சிகள், அறிக்கைகள், பத்திரங்கள் முதலானவற்றையும் லியோன் ட்ரொட்ஸ்கியை படுகொலை செய்யவும் ட்ரொட்ஸ்கிச இயக்கதை அழிக்கவும் ஸ்டாலினிச ஏஜன்டுகள், அமெரிக்க ஏகாதிபத்திய அரசாங்கத்தின் ஏஜன்டுகளுடன் கூட்டாக தொழிற்பட்ட விதத்தினையும் ருசுப்படுத்துகின்றன.

| | | |
|---|---|---|
| இரு தொகுதிகளதும் | விலை | ரூபா. 320/= |
| ஒரு தொகுதி | விலை | ரூபா. 160/= |

தொடர்புகள்:—
ஆனந்த வக்கும்புர
90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு 10

## அனைத்துலக பங்கு சந்தை. .

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

கமில்லை.

இப்பொருளாதார பொறிவுக்கும், புரட்சிகரப் போராட்டங்களுக்கும் முகம் கொடுக்க தயாராகும் படி 'தொழிலாளர் பாதை' தொழிலாள வர்க்கத்தை வேண்டுகின்றது. யூ. என். பி அரசாங்கத்தின் 'அமைதி', 'ஜனநாயகம்' களின் காவிகளாக செயற்படும் சமசமாஜ — கம்யூனிச — மத்தியவாதிகளுக்கு எதிராக யூ. என். பி அரசாங்கத்தை வெளியேற்றி இந்திய — இலங்கை உடன்படிக்கையை நிராகரிக்கப் போராடும் படி கோர வேண்டும். அதன் மூலம் ஏகாதிபத்திய, முதலாளித்துவச் சொத்துக்களை நஷ்ட ஈடின்றி தொழிலாள ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்க தொழிலாளர் வர்க்கம் உடன் தலையிட வேண்டும். இப் புரட்சிகரப் பொறுப்புக்கு தோள் கொடுக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணையுமாறு நம் தொழிலாளர்கள், ஒடுக்சப்படும் மக்களை வேண்டுகின்றோம்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்நெருக்கடியினை தீர்க்க தரிசனமாக கண்டு தொழிலாள வர்க்கத்தை எச்சரித்ததோடு 1950 — 60 ம் ஆண்டுகளில் சமசமாஜிஸ்டுகளின் தொடர்பு பூண்ட பப்லோவாத திரிபுவாதிகளுக்கு எதிராக ஈவிரக்கமற்ற போரில் ஈடுபட்டது இதன் உச்சக கட்டமாக 1985 ல் பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஹீலி — பண்டா — சலோற்றர் துரோகிகளின் காட்டிக் கொடுப்புக்களை எதிர்த்து போரிட்டு வெற்றிக் கண்டது.

உலக முதலாளித்துவ பொறிவு கோட்பாடு தவறானது எனக் காட்ட முயன்ற பண்டா இன்றைய பொறிவுக்கு மத்தியில் ஸ்டாலினிச, சீர்திருத்தவாதிகளுடன் கைகோர்த்துக் கொண்டு உள்ளார். முதலாளித்துவம் தன்னுள் சூல் கொண்டுள்ள முரண்பாடுகளினுல் வீழ்ச்சிக்கு இலக்காகின்றது என்பதை நிராகரிக்கும் சகல துரோகிகளும் மார்க்சிசத்தின் எதிரிகளாகின்றனர் முதலாளித்துவத்தின் எடுபிடிகளாகின்றனர்.

தொழிலாள வர்க்கத்துக்குள்ள ஒரே வழி முதலாளித்துவத்தை தூக்கி வீசி, உலக சோசலிசப் புரட்சியை வெற்றியீட்டச் செய்ய போராடுவதே இதன் அடிப்படையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணையுமாறும், அதன் தொழிலாளர் பாதை' 'கம்கறு மாவத்த' பத்திரிகைகளை கட்டி எழுப்பும் போராட்டத்தில் இணையுமாறும் நாம் வேண்டுகின்றோம்.

## அக்டோபர் புரட்சி ஞாபகார்த்த கூட்டம்

- ட்ரொட்ஸ்கி படுகொலையின் 47 வது ஆண்டு நிறைவு
- ரொம் ஹெனகன் படுகொலையின் 10 வது ஆண்டு நிறைவு

## பொதுக் கூட்டம்

நவம்பர் 21 மாலை 4.30 மணிக்கு
கண்காட்சி: பி. ப. 2.00 மணிக்கு
இடம்: நாராயணகுரு மண்டபம், (விளாமரச் சந்தி) கிராண்பாஸ்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இளம் சோசலிஸ்டுகள்

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு -10, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம 90, இடததல் வசிக்கும ஆனந்த வக்கும்புரவினுல் மஹரகம நாகஹவத்தை வீதி 53 ம் இலக்கத்தில் உள்ள பிரதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்